பெரம்பலூர் நகராட்சி

**2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் –31 ம் நாள் புதன் கிழமை காலை 11.00**

**மணிக்கு பெரம்பலூர் நகர்மன்றத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை : நகர் மன்ற தலைவர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| **31.07.2024** | **பொருள்:- 01 :** இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் KNMT-2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் பேருந்து நிலையத்தில் கூடுதல் பேருந்து நிறுத்தம் மற்றும் கடைகள் கட்டுவதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.372.00 இலட்சம், மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் முன்னேற்ற பணிகள் செய்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ. 478.00 இலட்சம் மற்றும் தினசரி காய்கறி அங்காடியை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக கடைகள் கட்டுவதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.248.00 இலட்சம் ஆகிய பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.<br>மேற்கண்ட பணிகளின் புதிய கட்டுமானம் செய்ய வேண்டிய கட்டடங்களுக்கு துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை பெரம்பலூர் அவர்களிடம் கட்டட வரைபட அனுமதி பெறப்படவேண்டியுள்ளது. இப்பணிக்கு பதிவு பெற்ற கட்டட வரைபட வரைவாளர் (Auto Cadd) மூலம் கட்டட வரைபடங்கள் வரைந்து இணையதளம் வழியாக பதிவேற்றம் செய்து நகர் ஊரமைப்புத்துறையின் விதிமுறைகளின்படி அனுமதி பெறுவதற்கு கட்டட வரைபட வரைவாளருக்கு கட்டணமாக உத்சேத செலவினம் ரூ.60,000/- வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–** அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2024/இ1. | தீர்மான எண்.698<br><br>அனுமதிக் கப்பட்டது |
| **31.07.2024** | **பொருள்:- 02 :** பெரம்பலூர் நகராட்சிக்கு உட்பட்ட 21 வார்டுகளில் அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள், ஆய்வுக்கூட்டங்கள், நேரடி தள ஆய்வுகள் மற்றும் இந்நகராட்சியின் அறிவுப்புகள், மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றை சமூக ஊடகங்களான Twitter, Facebook, Whatsapp, Instagram மேலும் அவ்வப்போது உருவாகும் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யவும், பொது மக்கள், சமூக ஊடகங்கள் மற்றும் வலை தளங்களின் மூலம் வரப்பெறும் குறைகளை தொடர்ந்து கண்காணித்து ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் பார்வைக்கு வைக்கவும், மேற்கண்ட பணிகளை தொடர்நடவடிக்கை மேற்கொள்ள தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தபுள்ளி கோரி செயல்படுத்த வேண்டுமென நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தேர்வுநிலை நகராட்சிக்கு மாதாந்திரசெலவினமாக ரூ.7,000/- வீதம் ஓராண்டிற்கு ரூ.84,000/-க்கு தோராய செலவினத்திற்கும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-** அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2024/இ1. | தீர்மான எண்.699<br><br>அனுமதிக் கப்பட்டது |

<table>
<tr>
<td>31.07.2024</td>
<td>பொருள்:- 03 : இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் (KNMT- 2024-25) பெரம்பலூர் வடக்கு கிராம புல எண்.280/2 –ல் மேட்டுத்தெருவில் அமைந்துள்ள தினசரி மார்கெட் கடைகள் கட்டுமானங்கள் மற்றும் மேற்கூரைகள் அனைத்தும் சேதமடைந்து மோசமான நிலையில் உள்ளது. சேதமடைந்த நிலையில் உள்ள கடைகளை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக கடைகளை கட்டுவதற்கு ரூ.248.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2105/2024/P1, நாள்.26.06.2024–ன்படி நிர்வாக அனுமதி வழக்கப்பட்டுள்ளது. எனவே, பழைய தினசரி மார்கெட் சேதமடைந்து மோசமான நிலையில் உள்ள கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :– அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண்.1974/2024/இ1.</td>
<td>தீர்மான எண்.700 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.07.2024</td>
<td>பொருள்:- 04 : இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2023-2024 திட்டத்தில் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு 27.06..2024 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>2ணு</td><td colspan="4">தூய்மை இந்தியா திட்டம் 2023-2024</td></tr>
<tr><td>வ. எ ண்</td><td>பணியின் விவரம்</td><td>மதிப்பீடு தொகை (இலட்ச ம்)</td><td>வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியி ன் விவரம்</td><td>குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்</td></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">இந்நகராட்சிக்கு சொந்தமான நெடுவாசல் ரோடு குப்பை கிடங்கு அமைந்துள்ள இடத்தில் நுண்ணிய உரமாக்கும் மையம் (MCC) கட்டும் பணி</td><td rowspan="2">34.50</td><td>TCB Construction, ஒப்பந்ததார, பெரம்பலூர் 0.05 % மதிப்பீட்டைவிட குறைவு</td><td rowspan="2">குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள TCB Construction ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்</td></tr>
<tr><td>திரு. சுதாகர். ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 4.20 % மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சி வார்டு எண் 06 ல் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் புதிய சிறுநீர் கழிப்பிடம்</td><td>0.96</td><td>திருமதி. S .ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.03 % மதிப்பீட்டைவிட குறைவு</td><td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. S ஜெயந்தி ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்</td></tr>
</table></td>
<td>தீர்மான எண். 701 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | (Urinal) கட்டும் பணி | | JBJ Bulders , ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0. 72 % மதிப்பீட்டிற்கு அதிகம் | |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்கண்டுள்ளவாறு வரிசை எண் 01 மற்றும் 02 ல் கண்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று 28.06.2024. அன்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க. எண். 1040/2024/ இ1**

---

**31.07.2024**

**பொருள்:- 05:** இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2021-2022 திட்டத்தில் கீழ்கண்டுள்ள் பணிகளுக்கு 27.06..2024 ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மான எண்.702 அனுமதிக் கப்பட்டது

| 2ணு | | **தூய்மை இந்தியா திட்டம் 2021-2022** | | |
|---|---|---|---|---|
| **வ. எ ண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்ச ம்)** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியி ன் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
| 1 | வார்டு எண் 16 ல் உள்ள அரணாரை பகுதியில் சமுதாய கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி மேற்கொள்வதற்கு | **24.96** | திருமதி. S .ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.09 % மதிப்பீட்டைவிட குறைவு | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித் துள்ள திருமதி. S ஜெயந்தி ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் |
| | | | JBJ Bulders , ஒப்பந்ததாரர் பெரம்பலூர் **0. 96** % மதிப்பீட்டிற்கு அதிகம் | |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்கண்டுள்ள பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று 28.06.2024. அன்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க. எண். 3041/2022/ இ1**

| | | |
|---|---|---|
| **31.07.2024** | **பொருள்:- 06 :** அரசாணை(நிலை) எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.03.2024-ல் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தினை செயல்படுத்தும் மாவட்ட திட்ட அலுவலக கட்டுபாட்டின்கீழ் இயங்கும் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கட்டடங்கள் பராமரிப்புபணி , மின் இணைப்பு வசதி , தண்ணீர் வசதி, கழிவறை வசதி ஆகிய பணிகளை நகராட்சி நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இதற்கான நிதி ஆதாரம் பொது நிதி (அ) மாநில நிதிக்குழு மான்யம் (அ) 15 வது நிதிக்குழு மான்யம் (அ) கல்வி நிதி ஆகிய நிதி ஆதாரங்களைக்கொண்டு பணி மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>**ந.க. எண். 2636/2024/ இ1** | தீர்மான எண். 703 அனுமதிக் கப்பட்டது |
| **31.07.2024** | **பொருள்:- 07 :** அரசாணைஎண் 298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 20.11.1996-ல் பேரூராட்சி /நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சந்தைகள், பூங்காக்கள், விளையாட்டுத்திடல்கள், கண்மாய்கள், ஏரிகள், மாட்டுத்தொழுவம் ஆகிய சொத்துக்களை ஊராட்சி ஒன்றிய பராமரிப்பிலிருந்து பேரூராட்சி / நகராட்சி நிர்வாகத்தின்கீழ் பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் உள்ள சொத்துக்களை நகராட்சி வசம் ஒப்படைத்து பெயர் மாற்றம் செய்துதரக் கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் பெரம்பலூர் அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க. எண்.1057/2024/அ2. நாள் .05.07.2024-ன் படி, பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 3 ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகள் மற்றும் ஒரு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகியவற்றினை நகராட்சி துவக்கப்பள்ளிகள் மற்றும் நகராட்சி நடுநிலைப்பள்ளி என பெயர் மாற்றம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது . எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–** பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>**ந.க. எண். 2585/2024/ இ1** | தீர்மான எண். 704 அனுமதிக் கப்பட்டது |
| **31.07.2024** | **பொருள்:- 08 :** பெரம்பலூர் நகராட்சியில் முதற்கட்டமாக அரசாணை எண்.43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந 4-1) துறை நாள். 27.07.2022-ன்படி நகராட்சி பகுதியில் உள்ள தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 118 மாணவ மாணவிகளுக்கும் மற்றும் அரசாணை எண்.01 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந 4-1) துறை நாள். 13.01.2023-ன்படி இந்நகராட்சி பகுதியில் உள்ள நடுநிலைப்பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 67 மாணவ மாணவிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்ட மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் தினசரி காலை உணவு சரஸ்வதி மகளிர் சுயஉதவிக்குழுவினரால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.<br>மேற்படி மூன்று தொடக்கப்பள்ளிகள் மற்றும் ஒரு நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு உணவு பரிமாறுவதற்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 1500/- வீதம் வழங்குவதற்கும் இதற்கான செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2021/எம்1. நாள். 02.11.2022 மற்றும் 07.06.2023 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பள்ளிகளில் காலை சிற்றுண்டி பரிமாறுவதற்கு இரண்டு பள்ளிகளுக்கு ஒரு பணியாளர் வீதம் நான்கு பள்ளிகளுக்கும் இரண்டு பணியாளர்களை நியமித்தும் ஒரு பணியாளருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 1,500/- வீதம் இரண்டு பணியாளர்களுக்கும் | தீர்மான எண்.705 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மாதம் ரூ. 3,000/- செலவினம் மேற்கொள்வதற்கு அனுமதிக்கும் மேற்படி பள்ளி மாணவ மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் துவங்கப்பட்ட நாள் முதல் தினசரி காலை உணவு பரிமாறும் பணியினை மேற்கொள்ளப்பட்டு வந்த சரஸ்வதி மகளிர் சுயஉதவிக்குழு நிறுவனத்திற்கு தொகையினை வழங்க அனுமதிக்கலாம். மேலும், ஜனவரி 2023 முதல் ஜீன் 2024 வரை உள்ள18 மாதங்களுக்கு நிலுவை மதிப்பூதியம் ரூ. 54,000/- மற்றும் ஜீலை 2024 முதல் மார்ச் 2025 வரை முடிவடைய உள்ள 9 மாத காலத்திற்கு ரூ. 27,000/- வழங்கிட அனுமதிக்கும் மேற்படி பள்ளிகளுக்கு காலை சிற்றுண்டி உணவு பரிமாறுவதற்கான செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–** அனுமதிக்கலாம்<br>**ந.க. எண். 4698/2022/ இ1** | |
| **31.07.2024** | **பொருள்:- 09 :** பெரம்பலூர் நகராட்சியில் வார்டு எண்.**1–**ல் டால்பின் நகர், வார்டு எண்.**2–**ல் சாமியப்பா நகர் கடைசி தெரு, உப்போடை மேற்கு புறம் அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றிலிருந்து செல்லும் பைப்லைன், மற்றும் வார்டு எண். 17 ல் ஏவிஆர் நகர் பகுதியில் குடிநீர் குழாய்கள் நீட்டிப்பு செய்யும் பணிக்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க. எண். 2808 /2024/ இ1** | தீர்மான எண்.706 அனுமதிக் கப்பட்டது |
| **31.07.2024** | **பொருள்:- 10:** பெரம்பலூர் நகராட்சியில் வார்டு எண்.**9-**ல் அவ்வையார் தெருவில் அவ்வையார் தெருவில் சிமெண்ட் சாலை நடுவில் ஒரு ஆழ்துளைக்கிணறு உள்ளது. இக்கிணற்றில் தண்ணீர் வளம் நல்ல முறையில் உள்ளது. மேலும் சாலையின் நடுவில் அமைந்துள்ளதால் நான்கு சக்கர இலகுரக வாகனங்கள் கூட செல்ல இயலாத நிலையில் உள்ளது. எனவே, இந்த ஆழ்துளை கிணற்றில் உள்ள கைபம்பை அகற்றி விட்டு மின்மோட்டார் பொருத்தி மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.**2,20,000/-** வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க. எண்.2814 /2024/ இ1** | தீர்மான எண். 707 அனுமதிக் கப்பட்டது |
| **31.07.2024** | **பொருள்:- 11 :** இந்நகராட்சியின் பொது நிதி 2024-2025 ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கு 16.07.2024 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோ வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின்பார்வைக்கும், முடிவ வைக்கப்படுகிறது. | தீர்மான எண். 708 அனுமதிக் கப்பட்டது |

**2024 -2025** பொது நிதி

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் நகராட்சி பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வழங்கப்படும் குடிநீர் அளவுமானி அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதனை துல்லியமாக அளவீடுகள் செய்வதற்கு நகராட்சி மூலம் புதிய அளவுமானி வாங்கி பொருத்தும் பணி | 4.00/- | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.11% மதிப்பீட்டிற்கு குறைவு<br>JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.17 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S.ஜெயந்தி பெரம்பலூர் ஒப்பந் தப்புள்ளியினை ஏற்கலாம் |
| 2 | பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான ஆத்தூர் ரோடு மற்றும் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள நுண்ணுயிர் உரம் செயலாக்க மையத்தில் உள்ள குப்பை அரைக்கும் இயந்திரத்தில் (Shredder) உள்ள மோட்டார் பழுதடைந்ததை சரி செய்யவும் அதன் Belt மற்றும் உள்ளே உள்ள வலையினை சரிசெய்யவும், அதன் Starter, மற்றும் Shutter பழுதுகளை சரிசெய்யும் பணி | 2.80/- | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.94% மதிப்பீட்டிற்கு குறைவு<br>JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 1.80 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S.ஜெயந்தி பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் |
| 3 | பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9-ல் வாசுகி தெரு மற்றும் வார்டு எண்.19-ல் பாட்டப்பன் கோவில் தெரு பகுதிகளில் மழைநீர் கால்வாய்களின் பக்க சுவர்கள் பழுதுடைந்துள்ளதை சரி செய்து அதன் | 8.50/- | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.06% மதிப்பீட்டிற்கு குறைவு<br>JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.20 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S.ஜெயந்தி பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 4 | பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் மின் இணைப்பு துண்டிப்பு ஆகும் நேரங்களில் உபயோகப்படுத்தப்படும் 40 KVA GENSET-ல் பழுதுகள் ஏற்பட்டு இயங்க இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே, அதனை சரிசெய்து பராமரிக்கும் பணி | 1.00/- | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.83% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 1.32 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S.ஜெயந்தி பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் | |
| | 5 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 21 வரையுள்ள தற்பொழுது புதியதாக தார்சாலை அமைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாதாளசாக்கடை கழிவுநீர் குழாயின் ஆள் இறங்கும் தொட்டியின் மட்டம் (Manhole) தரைமட்டத்தை விட குறைவாக உள்ளதால் தொட்டியினை (Manhole) தரைமட்டத்திற்கு உயர்த்தும் பணி | 4.50/- | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.20% மதிப்பீட்டிற்கு குறைவு<br>JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 1.20 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S.ஜெயந்தி பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் | |
| | 6 | பெரம்பலூர் நகராட்சி பகுதிகளில் 35 ஆழ்குழாய் கை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது சீர் செய்யும் பணி | 2.00/- | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.40% மதிப்பீட்டிற்கு குறைவு<br>JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.54 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S.ஜெயந்தி பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் | |
| | 7 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளின் உள்ள | 4.90 | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.70% மதிப்பீட்டிற்கு குறைவு | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S.ஜெயந்தி பெரம்பலூர் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை பழுது சீர் செய்யும் பணி | | JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 1.20 % மதிப்பீட்டிற்கு அதிகம் | ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் |
| 8 | பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள அம்மா உணவகம் மற்றும் நகராட்சி அலுவலகம் அருகே உள்ள அம்மா உணவகத்தில் உள்ள மின் விசிறிகள் மற்றும் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளது. எனவே, அதனை பழுது நீக்கம் செய்யவும் புதியதாக மின்விசிறிகள் மற்றும் மின்விளக்குகள் அமைக்கும் பணி | 0.60/- | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.58% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 1.76 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் |
| 9 | பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 ல் TELC பள்ளி தெற்கு புறம் உள்ள வீதியில் பைப்லைன் விஸ்தரிப்பு பணி மற்றும் வார்டு எண் 9 ல் E.B. ஆபிஸ் பின்புறம் உள்ள தெருவில் 4 ரோட்டில் இருந்து வரும் பைப்லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளதை சரி செய்யும் பணி | 1.80/- | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.52% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 1.02 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் |
| 10 | பெரம்பலூர் நகராட்சியின் மின் கட்டணம் குறைக்கும் பொருட்டு அலுவலக | 3.75/- | Muthu Power systemsஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.39% மதிப்பீட்டிற்கு | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த Muthu Power |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | வளாக கட்டிடத்தில் சோலார் தகடுகளில் By – Directional Meter பொருத்தி (Battery இல்லாமல்) அதன் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளை சரி செய்தும் மற்றும் பராமரிப்பு செய்யும் பணி | | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.77 % மதிப்பீட்டிற்கு அதிகம் | systems பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் | |
| | 11 | பெரம்பலூர் நகராட்சியில் K.N.M.T. திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கு திட்டப்பிரேரனைகள் சமர்ப்பிக்க இத்திட்டங்களுக்கு தேவையான AUTOCAD DRAWING, STRUCTURAL DESIGN, 3D DRAWING , மழைநீர் வடிகால் பணி செய்ய CATCHMENT AREA, RAINFALL RUN OFF QUANTITY, DRAIN VENT SIZE ஆகிய தொழில் நுட்ப கணக்கீடுகள் செய்யவும், கணினியில் வரைந்து கொடுக்கவும், தனியார் தொழில் நுட்ப வல்லுனர்களிடம் அணுகி மேற்கொள்ளும் பணி | 5.00/- | JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.14% மதிப்பீட்டிற்கு குறைவு<br>S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 1.38 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த JPJ Builders பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் | |
| | 12 | பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9-ல் உள்ள துறைமங்கலம் தரைமட்ட | 2.00/- | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.37% மதிப்பீட்டிற்கு | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தொட்டியில் உட்புற சுவர்கள் பழுதடைந்துள்ளதை பழுது சீர் செய்யும் பணி மற்றும் அதன் மேல்மூடி மாற்றம் செய்யப்பட்டு சுத்தம் செய்து வர்ணம் பூசும் பணி | | K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.51 % மதிப்பீட்டிற்கு அதிகம் | ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் | |
| | 13 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் -13 பாலாஜி நகர் இரண்டாவது தெருவில் சிமெண்ட் சாலை சுமார் 15 மீட்டர் நீளத்திற்கு பழுதடைந்து உள்ளதை பழுது சீர் செய்யும் பணி , மற்றும் பாலாஜி நகர் பகுதியில் முதல் தெருவில் சுமார் 2.00 மீட்டர் நீளத்திற்கு சிறுபாலத்தின் ஒரு பகுதி பழுதடைந்து உள்ளதை சரி செய்யும் பணி வார்டு எண் 16அரணாரை பகுதியில் மாரியம்மன் கோவில் அருகில் திருவள்ளுவர் தெருவில் சுமார் 4.00 மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் சாலை பழுதடைந்து உள்ளதை பழுது சீர் செய்யும் பணி | 2.50/- | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.48% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.67 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் | |
| | 14 | பெரம்பலூர் நகராட்சியில் மின் மோட்டார்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் 5 எண்ணிக்கையில் 15 HP(Stand by) மின் மோட்டார்கள் வாங்கி இருப்பு வைத்துக்கொள்ளும் பணி | 11.00/- | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு<br>JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.13 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S.ஜெயந்தி பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 15 | பெரம்பலூர் நகராட்சியில் 6 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் நீரேற்றம் செய்யப்படுவதால் திரவகுளோரின் இருப்பு வைத்து குழாய் நீரில் கலந்து விடவும் குடிநீர் அளவுமானி பொருத்தி வழங்கப்படும் நீரின் அளவினை கண்காணிக்கவும் துறையூர் ரோட்டில் சாலை ஓரத்தில் ஒரு அறை கட்டும் பணி | 10.80/- | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.25% மதிப்பீட்டிற்கு குறைவு<br>JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.37 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S.ஜெயந்தி பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் | |
| | 16 | இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டு பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் குழாய், உப்பு தண்ணீர் குழாய் மற்றும் கேட்வால்வுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது சீர் செய்யும் பணி | 4.95/- | G , கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.10% மதிப்பீட்டிற்கு<br>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.30 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த G , கண்ணன் பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் | |
| | 17 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 சிலோன் காலணி பகுதியில் பழைய ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் சிக்கிக் கொண்டதால் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி பைப்லைன் அமைக்கும் பணி | 2.00/- | S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.99% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.37 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த S.ஜெயந்தி பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்ஏற்கலாம் | |
| | 18 | இந்நகராட்சியில் NSMT 2022-2023, 2023-2024 மற்றும் 2024-2025 ஆம் | 12.30/- | M/s. TCB Construction ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s. TCB | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டு திட்டத்தின் கீழ் 22.720 கி.மீ நிளத்திற்கு 117 எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ள சாலைகளில் சுமார் **240** இடங்களில் வேகத்தடைகளில் வெள்ளை நிற சாலைக் கோடுகள் (Thermo plast) அடிக்கும் பணி | | 0.08% மதிப்பீட்டிற்கு குறைவு<br>K. JPJ Builders ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.17 % மதிப்பீட்டிற்கு அதிகம் | Construction பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் |
| 19 | இந்நகராட்சியில் உள்ள அடிப்படை கட்டமைப்புகள் சாலைகள், கால்வாய்கள், சிறுபாலங்கள், தெருவிளக்குகள், பாதாள சாக்கடை , ஆள்இறங்கும் தொட்டிகள் (Man hole ) குடிநீர் குழாய் வாழ்வுகள், நில அமைப்புகள், (மேடு பள்ளங்கள்) சாலைகளின் நீளம் , அகலம் மற்றும் 198.933 கி.மீ சாலைகளையும் அளவீடு செய்து வருங்காலங்களில் நகராட்சிக்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கும் பணி | 11.00/- | Sri Vinayaga construction ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>S.ஜெயந்தி ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.99% மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த Sri Vinayaga construction பெரம்பலூர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் |

**லுவலக குறிப்பு**

மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க. எண். 2249 /2024/ இ1**

**31.07.2024**

**பொருள்:- 12 :** இந்நகராட்சியின் அவசர அத்தியாவசியம் கருதி பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்ததால் நகர்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 2023–ன்படி விதி 57 (7) –ன் கீழ் மார்ச் 2024 முதல் ஜூன் 2024 முடிய உள்ள மாதத்தில் ஆணையர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கீழ்கண்டுள்ள பணிகளுக்கான செலவினம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | செலவினத் தொகை |
|---|---|---|
| 1 | வார்டு எண்.2 சாமியப்பா நகர், வார்டு எண். 21 அயோத்தி தாசர் பண்டிதர் தெரு, மற்றும் வார்டு எண்.5ல் பாரதிதாசன் நகர் பகுதியில் தெரு விளக்கு அமைக்கும் பணிக்கு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்தியது | 64700 |
| 2 | மக்களுடன் முதல்வர் திட்டம் தொடர்பாக ஜே.கே. திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு வாடகை தொகை வழங்கியது. | 26100 |
| 3 | இந்நகராட்சி கனரக வாகனம் TN 46 J 7972 வாகனத்திற்கு பேட்டரி மற்றும் டயர் வாங்கியது | 30200 |
| 4 | இந்நகராட்சி கனரக வாகனம் TN 46 P 4158 வாகனத்தில் உள்ள குப்பை அள்ளும் கருவி பழுது நீக்கம் செய்தது | 21020 |
| 5 | இந்நகராட்சி கனரக வாகனம் TN 46 K 0021 வாகனம் குடிநீர் டேங்கர் லாரி பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் பணி செய்தது. | 429957 |
| 6 | இந்நகராட்சி கனரக வாகனம் TN 46 P 8533 தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கான லேடர் வாகனம் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்தது. | 524965 |
| 7 | சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் தேசிய ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி தூய்மை பணியாளர்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தியமைக்கான செலவினம் | 36750 |
| 8 | தீவிர பல்ஸ்போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்தியமைக்கு ஆட்டோ விளம்பரம் மற்றும் துவக்க விழா நிகழ்ச்சிக்கான செலவினம் | 15250 |
| 9 | இந்நகராட்சி கனரக வாகனம் TN 46 AB 9292 வாகனத்திற்கு பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்தது | 14307 |
| 10 | 15– வது வார்டு எம்.ஜி.ஆர். நகர் முதல் ஆலம்பாடி சாலையில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை குடிநீர் குழாய் அமைக்கும் பணி செய்தது | 450000 |
| 11 | 9– வது வார்டு புத்தேரி முதல் துறைமங்கலம் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி வரை குடிநீர் குழாய் பதிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதற்கான தொகை வழங்கியது | 550000 |
| 12 | இந்நகராட்சி கனரக வாகனம் TN 46 T3929 வாகனத்திற்கு பேட்டரி வாங்கியதற்கான செலவினம் | 6600 |
| 13 | இந்நகராட்சி கனரக வாகனம் TN 46 J 7972 வாகனம் பராமரிப்பு பழுது நீக்கம் பணிக்கான தொகை வழங்கியது | 249965 |

**அலுவலக குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க. எண். 2808 /2024/ இ1**

தீர்மான **எண். 709** அனுமதிக் கப்பட்டது

| | | |
|---|---|---|
| 31.07.2024 | **பொருள்:- 13 :** பெரம்பலூர் மாவட்ட நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் ந.க.எண்.72/2024-பெ.மா எண்ணுடைய 20.03.2024–ம் தேதிய செயல்முறைகள் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்.19/2024 என எண்ணிடப்பட்ட ஆணையின் மூலம் பெரம்பலூர்<br>நகராட்சி பெரம்பலூர் வடக்கு கிராம புல சர்வே எண்கள்–164/3B,–ல் 1.815 ஏக்கர் (7345.00 ச.மீ ) ஏக்கர் நிலத்தில் உள்ள மனைப்பிரிவு மற்றும் அதற்கான வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.<br><br>மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை, பூங்கா, பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானம் செய்வதற்குண்டான பகுதியினை திரு. ரெங்கராஜ் த/பெ முத்துக்கவுண்டர், நகராட்சி ஆணையர் பெயருக்கு தான செட்டில் மெண்ட் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவண நகலையும் இணைத்து அனுப்பியுள்ளனர். மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை வசதி ,மழைநீர் வடிகால் அமைப்பு மற்றும் தெருவிளக்கு போன்ற வசதிகளை மேற்கொள்ள உரிய கட்டணங்களை வசூலித்திடவும், உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தினை உட்பிரிவு செய்து வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்தும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி மனைப்பிரிவிற்கு கூராய்வு கட்டணமாக ரூ.1000/– மற்றும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% நிலப்பயன் மாற்றக்கட்டணம், மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான சாலை அமைப்பு, மழைநீர் வடிகால், தெருவிளக்கு அமைத்தல் குடிநீர், பாதாளசாக்கடை, பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் தொடர்பான பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து அதற்கான தொகை ஆகியவற்றை வசூல்செய்து கொண்டும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பெரம்பலூர் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடத்தினை<br>பெரம்பலூர் நகராட்சி ஆணையர் என்ற பெயரில் பட்டா மாற்றம் செய்தும் பெரம்பலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் ந.க.எண்.72/2024–பெ.மா– எண்னுள்ள 20.03.2024ம் தேதிய கடிதம் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்.19/2024 –ன் மூலம் வழங்கப்பட்ட ஆணைகளின்படி பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் வடக்கு கிராம புல சர்வே எண்கள்–164/3B,–ல் 1.815 ஏக்கர் (7345.00 ச.மீ ) நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு மற்றும் வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க. எண். 2808 /2024/ இ1** | தீர்மான எண். 710 அனுமதிக் கப்பட்டது |
| 31.07.2024 | **பொருள்:-14:** பெரம்பலூர் மாவட்ட நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் ந.க.எண்.132/2024-பெ.மா எண்ணுடைய 03.04.2024–ம் தேதிய செயல்முறைகள் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்.21/2024 என எண்ணிடப்பட்ட ஆணையின் மூலம் பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் தெற்கு கிராம புல சர்வே எண்கள்–174/11,13- ல் 0.915 ஏக்கர் (3700.00 ச.மீ ) நிலத்தில் உள்ள மனைப்பிரிவு மற்றும் அதற்கான வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை, பூங்கா, பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானம் செய்வதற்குண்டான பகுதியினை திரு. து. பார்த்திபன் த/பெ துரைசாமி, நகராட்சி ஆணையர் பெயருக்கு தான செட்டில் மெண்ட் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவண நகலையும் இணைத்து அனுப்பியுள்ளனர். மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை வசதி ,மழைநீர் வடிகால் அமைப்பு மற்றும் தெருவிளக்கு போன்ற வசதிகளை மேற்கொள்ள உரிய கட்டணங்களை வசூலித்திடவும், உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட | தீர்மான எண். 711 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இடத்தினை உட்பிரிவு செய்து வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்தும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி மனைப்பிரிவிற்கு கூராய்வு கட்டணமாக ரூ.1000/– மற்றும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% நிலப்பயன் மாற்றக்கட்டணம், மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான சாலை அமைப்பு, மழைநீர் வடிகால், தெருவிளக்கு அமைத்தல் குடிநீர், பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் தொடர்பான பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து அதற்கான தொகை ஆகியவற்றை வசூல்செய்து கொண்டும் தான செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலம் பெரம்பலூர் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடத்தினை பெரம்பலூர் நகராட்சி ஆணையர் என்ற பெயரில் பட்டா மாற்றம் செய்தும் பெரம்பலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் ந.க.எண்.132/2024–பெ.மா– எண்னுள்ள 03.04.2024ம் தேதிய கடிதம் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்.21/2024–ன் மூலம் வழங்கப்பட்ட ஆணைகளின்படி பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் தெற்கு கிராம புல சர்வே எண்கள்–174/11,13-ல் 0.915 ஏக்கர்(3700.00 ச.மீ )நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு மற்றும் வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1339/2024/எப்1** | |
| **31.07.2024** | **பொருள்:- 15 :** பெரம்பலூர் மாவட்ட நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் ந.க.எண்.62/2021-பெ.மா எண்ணுடைய 06.07.2021–ம் தேதிய செயல்முறைகள் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்.101/2021 என எண்ணிடப்பட்ட ஆணையின் மூலம் பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் வடக்கு கிராம புல சர்வே எண்கள்– 151/2,151/1A2,151/1B part - ல் மற்றும் பெரம்பலூர் தெற்கு கிராம சர்வே. எண்கள் 2/1 –ல் 3.78 ஏக்கர் (15297.12 ச.மீ ) நிலத்தில் உள்ள மனைப்பிரிவு மற்றும் அதற்கான வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை, பூங்கா, பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மானம் செய்வதற்குண்டான பகுதியினை திரு. மாணிக்கம் த/பெ செங்கோடகவுண்டர்,, நகராட்சி ஆணையர் பெயருக்கு தான செட்டில் மென்ட் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்ட தான செட்டில்மென்ட் ஆவண நகலையும் இணைத்து அனுப்பியுள்ளனர். மேலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை வசதி ,மழைநீர் வடிகால் அமைப்பு மற்றும் தெருவிளக்கு போன்ற வசதிகளை மேற்கொள்ள உரிய கட்டணங்களை வசூலித்திடவும், உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தினை உட்பிரிவு செய்து வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்தும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி மனைப்பிரிவிற்கு கூராய்வு கட்டணமாக ரூ.1000/– மற்றும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% நிலப்பயன் மாற்றக்கட்டணம், மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான சாலை அமைப்பு, மழைநீர் வடிகால், தெருவிளக்கு அமைத்தல் குடிநீர், பாதாளசாக்கடை சிறுபாலங்கள், பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் தொடர்பான பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து அதற்கான தொகை ஆகியவற்றை வசூல்செய்து கொண்டும் தான செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலம் பெரம்பலூர் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடத்தினை பெரம்பலூர் நகராட்சி ஆணையர் என்ற பெயரில் பட்டா மாற்றம் செய்தும் பெரம்பலூர் மாவட்ட நகர்<br><br>ஊரமைப்பு உதவி இயக்குநரின் ந.க.எண்.62/2021–பெ.மா– எண்னுள்ள 06.07.2021ம் தேதிய கடிதம் மற்றும் ம.வ/ந.ஊ.உ.இ.(பெ.மா) எண்.101/2021–ன் மூலம் வழங்கப்பட்ட ஆணைகளின்படி பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் வடக்கு கிராம புல சர்வே எண்கள்–151/2,151/1A2,151/1B part - ல் மற்றும் பெரம்பலூர் தெற்கு கிராம சர்வே. எண்கள் 2/1 –ல் 3.78 ஏக்கர் (15297.12 ச.மீ ) நிலத்தில் | தீர்மான எண். 712 அனுமதிக் கப்பட்டது |

அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு மற்றும் வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கிட மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3956/2021/எப்1**

---

**31.07.2024**

**பொருள்:- 16 :** பெரம்பலூர் நகராட்சியில் செயல்பாட்டில் இருந்த Town Vending Committee செயல் கால முடிவடைந்த நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.20789/2021/UPA நாள்.07.06.2024 ம் யே கடிதத்தில் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் விதிகள் 2015 பிரிவு (IV) ன் படி நகர விற்பனைக்குழு மூலம் உறுப்பினர்கள் தேர்வு செய்து அமைத்திட உத்திரவிடப்பட்டுள்ளது.

நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனையை ஒழுங்குபடுத்துதல்) சட்டம்–2014 ன் பிரிவு 38(1) ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு நடைபாதை விற்பனையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம் 2015 ன் விதி 11 ன் கீழ் நகர விற்பனைக் குழுவிற்கு சாலையோர வியாபாரிகள் 6 எண்ணிக்கை உறுப்பினர்களை தேர்வு செய்திட பெரம்பலூர் நகராட்சியின் சார்பாக பத்திரிகை விளம்பரம் செய்தவகையில் விளம்பர கட்டணம் கீழ்கண்டவாறு

| வ.எண் | செய்தி தாள் பெயர் | விளம்பர நிறுவனத்தின் பெயர் | விளம்பர எண். நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | தினகரன் நாளிதழ் | KAL PUBLICATIONS (P) LTD – TRICHY | 3300491764 / 22.06.2024 | ரூ.10920.00 |

ஆகவே, மேற்கண்டவாறு விளம்பர கட்டணம் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**:10760 /2014/எப்1

தீர்மான எண். 713 அனுமதிக் கப்பட்டது

---

**31.07.2024**

**பொருள்:- 17 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட தனியார் மருத்துவமனையிலும், பொது இடங்களிலும் மற்றும் வீடுகளில் நடைபெறும் பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைஆகிய நிகழ்வுகளை கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. ஜீன் 2024 ம் மாதத்தில் கீழ்கண்ட விபரப்படி கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பிறப்பு மற்றும் இறப்பு விபரம் | ஜீன் 2024 வரை | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | Ãw¥ò | 106 | 102 | **208** |
| 2 | Ïw¥ò | 15 | 11 | **26** |
| | bkh¤j« | **121** | **113** | **234** |

**அலுவலக குறிப்பு:–** மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

தீர்மான எண்.714 அனுமதிக் கப்பட்டது

<table>
<tr><td>31.07.2024</td><td>பொருள்:- 18 : பெரம்பலூர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2.0( நகர்புறம்) - Safaimitra Suraksh shehar தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் உள்ள 24 X 7 தொலைபேசி உதவி மையத்திற்கு வெளிக்கொணர்வு முகமை அடிப்படையில் பணியாட்கள் அனுப்பியது. பெரம்பலூர் நகராட்சிக்கான பங்கு தொகை ரூ.27100/- செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 922 /2024 /H1</td><td>தீர்மான எண்715. அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td>31.07.2024</td><td>பொருள்:- 19 : பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார கனரக வாகனம் (HCV) காம்பக்டர் லாரி TN46P4158 TATA பழுது நீக்கம் செய்வதற்கு 16.05.2024 அன்று மூடி முத்திரையிடப்பட்ட. விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>Lakshmi Audo Diesal Works.Salam Main Road, Mettur Dam</th><th>JVK Audo Diesal Works, Kalaram patti Main road, Salem</th><th>Sri Gana pathi Moter Works</th></tr>
<tr><td>1</td><td>ஹைட்ராலிக் எண்ணெய் 65 லிட்டர் மாற்றம்</td><td>13300</td><td>14500</td><td>15300</td></tr>
<tr><td>2</td><td>டீசல் பம்பு மற்றும் நாசில் 6 எண்ணிக்கை மாற்றுதல்</td><td>29500</td><td>30500</td><td>32000</td></tr>
<tr><td>3</td><td>பிரேக் புஸ்டர், பிளேட் புஸ்டர் சர்வீஸ் மற்றும் கிட் மாற்றியமைத்தல்</td><td>16300</td><td>17500</td><td>18600</td></tr>
<tr><td>4</td><td>ஹைட்ராலிக் குழாய், எண்ணெய் குழாய் கசிவு, ஹைட்ராலிக் 4 சிலிண்டர் சீல் கிட் மாற்றியமைத்தல்</td><td>46600</td><td>48500</td><td>50100</td></tr>
<tr><td>5</td><td>காம்பக்டர் லோடிங், பிளேட்பார்ம் சைட் மாற்றியமைத்தல்</td><td>38500</td><td>39600</td><td>42000</td></tr>
<tr><td>6</td><td>காம்பக்டர் லோடிங், ஜாக்கிங் மாற்றியமைத்தல்</td><td>77000</td><td>81000</td><td>85000</td></tr>
<tr><td>7</td><td>செல்ப் மோட்டார் சர்வீஸ்</td><td>10200</td><td>11500</td><td>12000</td></tr>
<tr><td>8</td><td>காம்பக்டர் பின்பக்க கதவு மாற்றியமைத்தல்</td><td>71100</td><td>73500</td><td>75000</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>302500</td><td>316600</td><td>330000</td></tr>
<tr><td></td><td>GST 18%</td><td>54450</td><td>56988</td><td>59400</td></tr>
<tr><td></td><td>மொத்தக்கூடுதல்</td><td>356950</td><td>373588</td><td>389400</td></tr>
</table>
மேற்கண்ட பணிக்கு 24.05.2024 பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில்</td><td>தீர்மான எண். 716 அனுமதிக் கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | வரிசை எண் 1 உள்ள **Lakshmi Audo Diesal Works.Salam Main Road, Mettur Dam** என்பவர் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2128/2024 /H1** | |
| **31.07.2024** | **பொருள்:- 20 :** பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனம் (LCV) TN46Q1819 ASHOK LEYLAND TIPPER LORRY பழுது நீக்கம் செய்வதற்கு 16.05.2024 அன்று மூடி முத்திரையிடப்பட்ட. விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி கொடுக்கப்பட்டுள்ளது. | தீர்மான எண். 717 அனுமதிக் கப்பட்டது |

| வ. எண் | பணியின் விபரம் | Lakshmi Audo Diesal Works.Salam Main Road, Mettur Dam | JVK Audo Diesal Works, Kalaram patti Main road, Salem | Sri Gana pathi Moter Works |
|---|---|---|---|---|
| 1 | முழுமையாக எண்ணைய் சேவை மற்றும் வடிகட்டி மாற்றுதல் | 14200 | 15000 | 15600 |
| 2 | கீயர் பாக்ஸ் கிளட்ச் பிளேட், கவர் அசம்பலி, ரிலிசர் பேரிங்க் மாற்றுதல் | 22500 | 23800 | 24000 |
| 3 | நான்கு சக்கர வாகனத்திற்கான கீரிஸ், எண்ணைய் , வாஸர் மாற்றுதல் | 18800 | 19500 | 20000 |
| 4 | காற்று வடிகட்டி மாற்றுதல் | 5200 | 6000 | 6500 |
| 5 | செல்ப் மோட்டார் மற்றும் டயனமோ சர்வீஸ் செய்தல் | 11900 | 12500 | 13200 |
| 6 | நான்கு சக்கர வாகனத்திற்கு ஸ்பீரிங்கர், மற்றும் ரீடெம்பரிங்க், போர் ஸ்பீரிங் கட் மற்றும் பின், புஸ் சென்டர் போல்ட் மாற்றுதல் | 21300 | 23000 | 23800 |
| 7 | ஓட்டுநர் மற்றும் கிளினர் இருக்கைகள் மாற்றுதல் | 6000 | 6800 | 7000 |
| 8 | ரேடியேட்டர் சர்வீஸ் செய்தல் மற்றும் ரேடியேட்டர் ஓஸ் (பைப்) மாற்றுதல் | 7600 | 8100 | 8500 |
| 9 | வாகன முழுவதற்கும் பெயிண்டிங் மற்றும் ஸ்டிக்கர் வேலை செய்தல் | 26000 | 28500 | 29600 |
| 10 | எலெக்ரிக் வயர்கள் புதியதாக மாற்றுதல் மற்றும் முகப்பு விளக்குகள் மற்றும் முன்புற பின்புற விளக்குகள் மாற்றுதல் | 5600 | 6000 | 6500 |
| 11 | டயர்கள் 6 எண்ணம் ரீட்டெடிங் மற்றும் பழுதுகள் மேற்கொள்ளுதல் | 51000 | 53500 | 54500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | கிளட்ச் சிலிண்டர் மாற்றுதல் | 2800 | 3100 | 3500 |
| 13 | முழுமையாக கேபின், கதவு, டேங்க், டிங்கரிங் மற்றும் வெல்டிங் வேலை செய்தல் | 28884 | 31500 | 32300 |
| 14 | கதவு பூட்டு, சரிசெய்தல் மற்றும் இருபக்க கண்ணாடி மாற்றுதல் | 7000 | 7500 | 7800 |
| | கூடுதல் | **228784** | **244800** | **252800** |
| | **GST 18%** | **41181** | **44064** | **45504** |
| | மொத்தக்கூடுதல் | **269965** | **288864** | **298304** |

மேற்கண்ட பணிக்கு 24.05.2024 பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 உள்ள **Lakshmi Audo Diesal Works.Salam Main Road, Mettur Dam** என்பவர் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2127/2024 /H1**

---

**31.07.2024**

**பொருள்:- 21:** பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் நீர் உந்து நிலையங்களில் உள்ள Standby மோட்டார்கள் பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, எதிர்வரும் மழைகாலங்களில் நீரேற்றம் செய்யும் பொருட்டும், கீழ்கண்டுள்ளவாறு உள்ள மின்மோட்டார்களை உடனடியாக பழுதுநீக்கம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 5.40 இலட்சத்திற்கு அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நீர் உந்து நிலையம் மற்றும் நீரேற்று நிலையம் அமைந்துள்ள இடம் | மின்மோட்டார்கள் விபரம் | என் |
|---|---|---|---|
| 1 | தெப்பகுளம் நீர் உந்து நிலையம் | 10HP<br>15 HP | 1 N<br>1 N |
| 2 | விளாமுத்தூர் நீர் உந்து நிலையம் | 15 HP | 1 N |
| 3 | துறைமங்கலம் நீரேற்று நிலையம் | 15 HP | 1 N |
| 4 | அரணாரை நீர் உந்து நிலையம் | 4 HP | 1 N |
| 5 | உப்பு ஓடை நீர் உந்து நிலையம் | 3 HP | 1 N |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். /2024/இ1**

தீர்மான எண். 718 அனுமதிக் கப்பட்டது

---

**31.07.2024**

**பொருள்:- 22:** பெரம்பலூர் நகராட்சி பகுதியில் வார்டு எண்.17-ல் உள்ள அரணாரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 2வது திறந்தவெளி கிணற்றினை தற்போது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது மேற்படி கிணற்றிலுள்ள நீரினை விநியோகம் செய்ய ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக குழாய் வரை 4 இஞ்ச் HDPE குழாய் அமைத்து வால்வு பொருத்தி இணைப்பு வழங்குவதற்கான பணிகள் செய்ய மதிப்பீட்டு தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 2809 /2024/இ1**

தீர்மான எண். 719 அனுமதிக் கப்பட்டது

| | | |
|---|---|---|
| **31.07.2024** | **பொருள்:- 23:** பெரம்பலூர் நகராட்சியில் வார்டு எண்.**6**-ல் வெங்கடாசலபதி நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்ய விநியோக குழாய் இல்லாத காரணத்தினால் **4** இஞ்ச் PVC குழாய் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. **7.00** இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.2810 /2024/இ1** | தீர்மான எண். 720 அனுமதிக் கப்பட்டது |
| **31.07.2024** | **பொருள்:- 24:**பெரம்பலூர் நகராட்சியில் உள்ள வார்டு எண்.**2** சாமியப்பா நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள அடிபம்பில் பைப்புகள், மற்றும் Plunger Rod, அடிபம்பு ஆகியவை பழுதடைந்துள்ளது. ஏனவே, அதனை மாற்றி புதியதாக அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. **80,000/-** க்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.2811 /2024/இ1** | தீர்மான எண். 721 அனுமதிக் கப்பட்டது |
| **31.07.2024** | **பொருள்:- 25:** பெரம்பலூர் நகராட்சி வார்டு எண்.**18**-ல் உள்ள செக்கடி தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து தெருவில் நீரேற்றம் செய்யும் PVC தொட்டியின் Plotform உடைந்து பழுதடைந்து நீரேற்றும் அறை, மற்றும் மின் இணைப்புகள் பழுதடைந்துள்ளது. அதனை பழுது நீக்கம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. ரூ. **80,000/–**க்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 2812 /2024/இ1** | தீர்மான எண். 722 அனுமதிக் கப்பட்டது |
| **31.07.2024** | **பொருள்:- 26:** பெரம்பலூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் அலுவலகத்தின் பின்புறம் வடகிழக்கு மூலையில் ஏற்கனவே அமைந்துள்ள இரும்பு கொட்டகையினை மேலும் **10** அடி அகலத்திற்கு நீட்டிப்பு செய்து அதன் உள்ளே துப்புரவு பணியாளர்களின் பணிக்கருவிகளை வைப்பதற்கு Shelf அமைத்து முன்புறம் இரும்பு கதவு அமைத்து பயன்படுத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**3,60,000**-க்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 2813 /2024/இ1** | தீர்மான எண். 723 அனுமதிக் கப்பட்டது |
| **31.07.2024** | **பொருள்:- 27:** பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் 4.20 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி மன்ற தீர்மான எண் 583 நாள் 31.01.2024 ல் அனுமதிக்கப்பட்டு 01.02.2024 முதல் 31.07.2024 வரை ஆறுமாத காலத்திற்கு காலநீடிப்பு செய்யப்பட்டுள்ள அனுமதிகாலம் 31.07.2024 ல் முடிவடைந்துவிட்டதால் V.B .Associates Chennai என்ற நிறுவனத்தின் மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை பராமரிப்புபணி செய்வதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதே விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள சம்மதித்து 01.08.2024 முதல் மேலும் ஆறுமாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து தரகோரி 19.07.2024 ல் கடிதம் சமர்ப்பித்துள்ளார் எனவே மனுதாரர் கோரியுள்ளபடி மீண்டும் ஆறுமாத காலத்திற்கு | தீர்மான எண். 724 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | நீட்டிப்புசெய்து வழங்கவும் தோரரய செலவினம் ரூ13.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மன்றம்அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 12973 /2018/ இ1 | |
| **31.07.2024** | **பொருள் 28 :** பெரம்பலூர் நகராட்சியில் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ( **TWAD** ) மூலம் குடிநீர் வழங்கப்பட்டு குழாய் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது வழங்கப்படும் குடிநீர் அளவு நகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலை உள்ளதால் உள்ளூர் குடிநீர் ஆதாரமான 29 திறந்த வெளி கிணறுகளின் மூலமும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கடும் வறட்சி காரணமாக திறந்த வெளி கிணறுகளிலும், நகரில் பயன்பாட்டில் உள்ள ஆழ்துளை கிணறுகளிலும் உள்ள நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருவதால், பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோக இடைவெளி அதிகரித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் குடிநீர் விநியோக ஆய்வு கூட்டங்களில் குடிநீர் விநியோகம் சீரான முறையில் வழங்க உடனடி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>கூடுதலாக, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களும் நகர மக்களின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே தறகாலிகமாக நகராட்சி பகுதிகளில் டேங்கர் லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யும் பணியை நிறைவேற்ற உத்தேச செலவின தொகை ரூ.30.00 இலட்சத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண். 725 அனுமதிக் கப்பட்டது |

**//ஒம்//திருமதி.மா.அம்பிகா**
**நகர்மன்றதலைவர்**
**பெரம்பலூர் நகராட்சி**

**// உண்மை நகல்//**

ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி